54 விவசாய சங்கங்கள் கூட்டமைப்பின் தலைவர் முதலான 100 க்கும் மேற்பட்ட விவசாயிகள் சந்திப்பு!

# தி.மு.க. தேர்தல் அறிக்கையில் விவசாயிகள் நலன் கருதி பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டமைக்கு முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

## திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக்கு மனப்பூர்வமான ஆதரவு!



கடலூர், ஏப். 9-

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் 7.4.2026 அன்று கடலூரில் தேர்தல் பிரச்சார பொதுக் கூட்டத்தை நிறைவு செய்து செல்லும் வழியில், கடலூரில் தமிழ்நாட்டின் 54 விவசாய சங்கங்களின் கூட்டமைப்பான தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத்தின் தலைவர் காவேரி தனபாலன், செயலாளர் இளந்தீரன், பொருளாளர் காளிமுத்து மற்றும் நிர்வாகிகள் உட்பட 100க்கும் மேற்பட்டவர்கள் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பின்போது, கழக அரசு வேளாண்மைத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்திடும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் வேளாண்மைத் துறைக்கென 5 தனி நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டதோடு, வேளாண்மைத் துறை என்ற பெயரினை வேளாண்மை உழவர் நலத்துறை எனப் பெயர் மாற்றம் செய்து, வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், உழவர்களின் நலன் காக்கவும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், 2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்புகள், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்திட முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம், விவசாயிகள் தங்கள் விளைநிலங்களின் மண்வளத்தினை அறிந்திட தமிழ் மண் வளம் இணையதளம், வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டம், உழவர் பெருமக்களுக்கு வேளாண் உபகரண தொகுப்புகள் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியமைக்காகவும், கழக தேர்தல் அறிக்கையில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு உழவர்கள் தங்கள் பகுதிக்கு ஏற்ற பயிர்களைச் சிறந்த சாகுபடி முறைகளைப் பின்பற்றி அதிக மகசூலை அடைந்திடும் வகையில், "கிராம அளவிலான பயிர்ச் சாகுபடித் திட்டம்" தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும், வேளாண்காடுகள் பரப்பினை அதிகரிக்கும் வகையில் புங்கன், நாவல், ஈட்டி, தேக்கு, சந்தனம், செம்மரம், மகோகனி, மலைவேம்பு, நீர்மருது போன்ற மரங்களை வளர்ப்பது ஊக்குவிக்கப்படும், உழவர் சந்தைகள் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் புதிய உழவர் சந்தைகள் அமைக்கப்படும் போன்ற பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டமைக்காகவும் நன்றி தெரிவித்துக் கொண்டு, கோரிக்கை மனு அளித்தனர். அத்துடன் விவசாயப் பெருமக்களின் நலனிற்காக திட்டங்களை தீட்டி சீரிய முறையில் செயல்படுத்தி வருவதற்காக சட்டமன்ற பொதுத்தேர்தலில் கழக கூட்டணிக்கு தங்கள் ஆதரவினையும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, கடலூர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், கடலூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் சி.வி. கணேசன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

தி.மு.க.வின் கூட்டணி பலம், அரசின் சாதனைகள், தி.மு.க. தேர்தல் அறிக்கை மூன்று காரணங்களுக்காக

# தி.மு.க. கூட்டணி 200 இடங்களில் வெற்றி பெறும்!

## திண்டுக்கல் தொகுதி வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமாரை ஆதரித்து தொல்.திருமாவளவன் தேர்தல் பிரச்சாரத்தில் பேச்சு!



திண்டுக்கல், ஏப். 9 –

தி.மு.க. கூட்டணியில் உள்ளவர்களுக்கு அரசியல் பொருத்தம் இருக்கிறது, கொள்கை பொருத்தம் இருக்கிறது, கோட்பாடு பொருத்தம் இருக்கிறது அதன் காரணமாகத்தான் பல ஆண்டுகளாக கூட்டணியில் நீடிக்கிறோம் என்று திண்டுக்கல் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் ஐ.பி.செந்தில்குமாரை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவனத் தலைவர் தொல்.திருமாவளவன் பேசும்போது குறிப்பிட்டார்.

திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் ஐ,பி.செந்தில்குமாரை ஆதரித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி நிறுவன தலைவர் தொல்.திருமாவளவன் காமராஜபுரத்தில் வேனில் இருந்தபடி ஆதரித்து பிரச்சாரம் செய்தார் .

அவர் பேசுகையில் : செந்தில்குமார் ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவார் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை.

மீண்டும் சட்டமன்றத்திற்கு செல்வார் உங்கள் உணர்வுகளை சட்டமன்றத்தில் பிரதிபலிப்பார். உங்களுக்காக குரல் கொடுத்து பேசுவார் ஆனால் தான் அவரை தேடி வந்திருக்கிறேன் உன்னுடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதற்காக அவரது வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக வந்துள்ளேன்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் காலத்தில் இருந்து திமுகவுடன் 30 ஆண்டுகளாக பயணிக்கலாம் 25 30 ஆண்டுகளாக இணைந்து பயணிக்கின்றோம்.

பெரியார் அண்ணா ஆகிய மாமேதில் பல்கலை உள்வாங்கிக் கொண்டு ஏழை மக்களுக்காக போராடுகின்ற ஒரு இயக்கம் தான் திராவிட முன்னேற்ற கழகம் என்ற கொள்கையின் அடிப்படையில் தான் பயணித்து வருகிறோம்.

இந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இருந்து விடுதலை சிறுத்தைகள் கட்சி வெளியேறிவிடும் என பலரும் பேசினார்கள் என்னிடம் ஆசை காட்டி பார்த்தார்கள்.

திருமாவளவன் கூட்டணியில் இருந்து விலகினால் அந்த கூட்டணியை பலவீனப்படுத்தி விட முடியும் சிதறித்து விட முடியும் திமுக விழித்து விட முடியும் என்றெல்லாம் கணக்கு போட்டு பார்த்தார்கள்.

நான் பெரியார் அரசியலை உள்வாங்கியவன் அம்பேத்கர் அரசியலை படித்தவன் காரல் மார்க்ஸ் கொள்கைகளை அறிந்தவன் புரிந்தவன் சன்பரிவார அமைப்புகளுக்கு இடமில்லை என்பதில் விடுதலை சிறுத்தைகள் உறுதியாக இருக்கிறது.

அ.தி.மு.க. பா.ஜ.க.வை தனது தோளில் தூக்கி வருகிறது அவர்களாலே நியாயப்படுத்தி சொல்ல முடியாது. நாங்கள் தி.மு.க.வுடன் ஏன் கூட்டணி வைத்திருப்பதை நாங்கள் நியாயப்படுத்த முடியும் திமுகவுடன் இருக்கிறோம் கூட்டணியில் பயணிக்கின் றோம் காரணங்களை சொல்ல முடியும்.

எடப்பாடி பழனிச்சாமியால் பாஜகவுடன் கூட்டணி வைத்தது நியாயப்படுத்தி சொல்ல முடியுமா எந்த அடிப்படையில் பிஜேபியோட அதிமுக கூட்டணி வைத்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா புது மேடையில் எனது அரசியல் வாழ்வில் நான் பெரும் தவறு இழைத்து விட்டேன் பிழை செய்துவிட்டேன் பாஜகவுடன் கூட்டணி வைத்தது நான் செய்த பெரும் பிழை செய்துவிட்டேன் அதற்கு பரிகாரமாக தான் அவர்களின் ஆட்சியை கவிழ்த்தேன். என சொன்னவர் ஜெயலலிதா.

ஜெயலலிதா இருக்கும்போது ஒரு காலத்திலும் பாஜகவுடன் கூட்டணி அமைக்காது என சொன்னார் இது எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரியுமா தெரியாதா அதிமுக பாஜகவுடன் எந்த அடிப்படையில் கூட்டணி வைத்தது என்பதை நியாயப்படுத்த முடியுமா முடியாது.

அந்தக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்சியும் ஒருவருக்கு ஒருவர் கடுமையாக விமர்சித்துக் கொண்டவர்கள் மட்டுமின்றி சவால் விட்டுக் கொண்டவர்கள் எடப்பாடி உடன் கூட்டணி வைத்தால் தூக்கு போட்டு சாகலாம் என்று சொன்ன தலைவர் அதிமுக கூட்டணியில் தற்பொழுது இருக்கிறார்.

எடப்பாடி கடுமையாக விமர்சித்த அன்புமணி ராமதாஸ் தற்போது அதிமுக கூட்டணியில் இருக்கிறார்.

பா.ஜ..கவை கடுமையாக விமர்சித்த எடப்பாடி தற்போது அவர்களுடன் கூட்டணி வைத்துள்ளார்.

கொஞ்சம் கூட அவர்களுக்கு கருத்து அடிப்படையில் எந்த பொருத்தமும் கிடையாது.

தற்பொழுது தேர்தல் ஆதாயத்திற்கு மட்டுமே கைகோர்த்து உள்ளனர். இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் பாஜகவினர் தங்களது கைவரிசைகளை காட்ட முடிகிறது ஆனால் தமிழகத்தில் காட்ட முடியவில்லை.

பா.ஜ.க.வால் கடந்த 25 ஆண்டுகளாக எவ்வளவு முயற்சி செய்தும் தமிழகத்தில் காலூன்ற முடியவில்லை அதற்குக் காரணம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஜெயலலிதா என்பதை யாரும் மறந்து விட முடியாது.

திமுக கூட்டணியில் உள்ளவர்களுக்கு இடையே முரண்பட்டது உண்டு விமர்சனம் செய்தது உண்டு. ஆனால் அடிப்படையில் கைகோர்த்து நிற்பதற்கான காரணம் அரசியல் பொருத்தம் இருக்கிறது. கொள்கை பொருத்தம் இருக்கிறது கோட்பாடு பொருத்தம் இருக்கிறது அதனால் தான் கூட்டணி நீடிக்கிறோம்.

அ.தி.மு.க. வைத்திருக்கும் கூட்டணி அரசியல் சட்ட அமைப்பு எதிரான கூட்டணி பா.ஜ.க. வெறுப்பு அரசியலையும் மதம் சார்ந்த அரசியலையும் உயர்த்திப் பிடிக்கின்றனர் இது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு எதிரான கூட்டணி பா.ஜ.க. கூட்டணி.

அதனால்தான் 2016 ஆம் ஆண்டு முதல் திமுக கூட்டணியில் இருந்து ஒரு கட்சி கூட வெளியேறாமல் தொடர்ந்து நீடித்து வருகிறது தற்பொழுது தே.மு.தி.க. சேர்ந்துள்ளது எஸ்.டி.பி.ஐ. சேர்ந்துள்ளது பல கட்சிகள் சேர்ந்துள்ளது.

ஆட்சியில் பங்கு அமைச்சரவையில் பங்கு எனக் கூறிய விஜய் கட்சிக்கு எந்த கட்சியில் சேரவில்லை கூவை கூவி அழைத்தும் கூட யாரும் போய் சேரவில்லை.

தி.மு.க. கூட்டணி 200 இடங்களில் வெற்றி பெறும் என்று தளபதி சொன்னார். அதற்கு மூன்று காரணங்கள் ஒன்று கூட்டணி பலம், அரசியல் சாதனைகள், அரசின் சாதனைகள், தேர்தல் அறிக்கை என பேசினார்.



திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்று தென்காசி தெற்கு மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குலையநேரி ஊராட்சி இரட்டைக்குளம் நாட்டாமை முருகன் மற்றும் ஊராட்சி உறுப்பினர் மனோகரன், ராஜ் என்ற யோகநாதன்,குமார்,ஆறுமுகம், தேவேந்திரன்,சமுத்திரம் உட்பட அ.தி.மு.க., பா.ஜ.க.நிர்வாகிகள் 25 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். உடன் தென்காசி முன்னாள் மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன் உட்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் தி.மு.க.தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் கடையநல்லூரில் தென்காசி முன்னாள் மாவட்ட பொறுப்பாளர் மா.செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ பங்கேற்று கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதி ம.தி.மு.க. வேட்பாளர் தி.மு.ராஜேந்திரனை ஆதரித்து சிறப்புரையாற்றினார். உடன் கடையநல்லூர் தொகுதி ம.தி.மு.க வேட்பாளர் ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர் மாலைராஜா, சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ., ம.தி.மு.க. செயலாளர்கள் நிஜாம், சுதா பாலசுப்பிரமணியன், மின்னல் முகமது அலி, காங்கிரஸ் செல்வராஜ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மசூது, எஸ்.டி.பி.ஐ.யாசர் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராகப் போட்டியிடும் ஐ.பி.செந்தில்குமாரை ஆதரித்து திண்டுக்கல் காந்தி மார்க்கெட் காமராஜர்புரத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் பொதுமக்களிடையே வாக்கு சேகரித்தார். மாநகர செயலாளர் ராஜப்பா மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்



# தி.மு.க. இளைஞர் அணி



## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பரப்புரை மேற்கொண்டு வருகிறார். இரண்டு கட்ட பரப்புரை முடித்துள்ள நிலையில், மூன்றாம் கட்டமாக சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களில் பரப்புரை மேற்கொள்ள உள்ளார். அதன் விவரம் வருமாறு :

**9.4.2026 வியாழக்கிழமை**

| நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|
| காலை 9.30 மணி | பொன்னேரி | பஜார் தெரு, பொன்னேரி. |
| காலை 10.30 மணி | மாதவரம் | பழைய மாநகராட்சி அலுவலகம் எதிரில், பஜார் தெரு, மாதவரம். |
| மாலை 4.00 மணி | அண்ணா நகர் | டி.பி.சத்திரம், அண்ணா நகர். |
| மாலை 4.45 மணி | ஆயிரம் விளக்கு | சுதந்திரதினப் பூங்கா அருகில், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம். |
| மாலை 6.00 மணி | தியாகராய நகர் | முத்துரங்கன் சாலை, பேருந்து நிலையம் அருகில், தியாகராய நகர். |
| மாலை 6.45 மணி | விருகம்பாக்கம் | மார்க்கெட், எம்.ஜி.ஆர்.நகர். |
| இரவு 7.45 மணி | சைதாப்பேட்டை | வேளச்சேரி சாலை, சின்னமலை. |
| இரவு 8.45 மணி | சோழிங்கநல்லூர் | சர்ச் சாலை, கந்தன்சாவடி. |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை – 18
நாள் : 8.4.2026

கலைஞர் 100
1924 - 2023

